# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2422 - 2025 ජනවාරි මස 31 වැනි සිකුරාදා - 2025.01.31**

2422 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 02 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | - | | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | | | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”

**கே. ஜீ. பிரதீப் புஸ்ப குமார,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1 - B82651 - 5403 (2025/01)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**பியகம பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ள பாதையினை “சமரதுங்க இடம்” எனப் பெயர் சூட்டுவதற்காக மேல் மாகாணத்தில் கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கேற்ப கீழே உள்ள உப அட்டவணையில் விவரிக்கப்பட்ட பாதை பின்வருமாறு பெயர் சூட்டப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

எம்.யூ.ஆர். மத்துமகே,
பிரதேச சபையின் செயலாளரும், பிரதேச
சபையின் அதிகாரங்களை, வேலைகளை மற்றும்
கடமைகள் நடைமுறைப்படுத்தும் அதிகாரியும்,
பியகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பியகம,
2025, சனவரி 15.

**அட்டவணை**

| | |
|---|---|
| 1. உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | : பியகம பிரதேச சபை |
| 2. மாவட்டம் | : கம்பஹா |
| 3. கிராம அலுவலர் பிரிவு | : மாகோலா வட மத்திய |
| 4. வீதியின் தற்போதைய பெயர் | : - |
| 5. பாதைக்கு பயன்படுத்தியுள்ள புதிய பெயர் | : சமரதுங்க இடம் |
| 6. பாதையின் ஆரம்பம் | : 288, ஆம் வீட்டு இலக்கத்தைக், கொண்ட ஆதனம் |
| 7. பாதையின் முடிவு | : 288பி. ஆம் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் |

01-740/ 1

---

**பியகம பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ள பாதையினை “பூஜ்ய தம்மலோக நஹிமி மாவதா” எனப் பெயர் சூட்டுவதற்காக மேல் மாகாணத்தில் கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கேற்ப கீழே உள்ள உப அட்டவணையில் விவரிக்கப்பட்ட பாதை பின்வருமாறு பெயர் சூட்டப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

எம்.யூ.ஆர். மத்துமகே,
பிரதேச சபையின் செயலாளரும், பிரதேச
சபையின் அதிகாரங்களை, வேலைகளை மற்றும்
கடமைகள் நடைமுறைப்படுத்தும் அதிகாரியும்,
பியகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பியகம,
2025, சனவரி 15.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | : பியகம பிரதேச சபை |
| 2. | மாவட்டம் | : கம்பஹா |
| 3. | கிராம அலுவலர் பிரிவு | : 274/A, சியபலப்பே தெற்கு |
| 4. | வீதியின் தற்போதைய பெயர் | : - |
| 5. | பாதைக்கு பயன்படுத்தியுள்ள புதிய பெயர் | : வணக்கத்திற்குரிய தம்மலோக தேரர் மாவத்தை |
| 6. | பாதையின் ஆரம்பம் | : 123/1, ஆம் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் |
| 7. | பாதையின் முடிவு | : வல்லுகதெனிய வீதியை சந்திக்கும் இடம் |

01-740/2

---

**பியகம பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ள பாதையினை “சமரதுங்க இடம்” எனப் பெயர் சூட்டுவதற்காக மேல் மாகாணத்தில் கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கேற்ப கீழே உள்ள உப அட்டவணையில் விவரிக்கப்பட்ட பாதை பின்வருமாறு பெயர் சூட்டப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

எம்.யூ. ஆர். மத்துமகே,
பிரதேச சபையின் செயலாளரும், பிரதேச
சபையின் அதிகாரங்களை,
வேலைகளை மற்றும் கடமைகள் நடைமுறைப்படுத்தும் அதிகாரியும்,
பியகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பியகம,
2025, சனவரி 15.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | : பியகம பிரதேச சபை |
| 2. | மாவட்டம் | : கம்பஹா |
| 3. | கிராம அலுவலர் பிரிவு | : 278/A பொல்லேகலா |
| 4. | வீதியின் தற்போதைய பெயர் | : - |
| 5. | பாதைக்கு பயன்படுத்தியுள்ள புதிய பெயர் | : சமரதுங்க இடம் |
| 6. | பாதையின் ஆரம்பம் | : 317, ஆம் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் |
| 7. | பாதையின் முடிவு | : 317/8, ஆம் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் |

01-740/3

---

**பியகம பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ள பாதையினை “எம்.கே.எல். பெரேரா நூலகப் பாதை” எனப் பெயர் சூட்டுவதற்காக மேல் மாகாணத்தில்

கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கேற்ப கீழே உள்ள உப அட்டவணையில் விவரிக்கப்பட்ட பாதை பின்வருமாறு பெயர் சூட்டப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

எம்.யூ.ஆர்.மத்துமகே,
பிரதேச சபையின் செயலாளரும், பிரதேச
சபையின் அதிகாரங்களை, வேலைகளை மற்றும்
கடமைகள் நடைமுறைப்படுத்தும் அதிகாரியும்,
பியகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பியகம,
2025, சனவரி 15.

**அட்டவணை**

| | |
|---|---|
| 1. உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | : பியகம பிரதேச சபை |
| 2. மாவட்டம் | : கம்பஹா |
| 3.கிராம அலுவலர் பிரிவு | : தல்வட்டா |
| 4.வீதியின் தற்போதைய பெயர் | : - |
| 5. பாதைக்கு பயன்படுத்தியுள்ள புதிய பெயர் | : எம்.கே.எல்.பெரேரா நூலகப் பாதை |
| 6. பாதையின் ஆரம்பம் | : 19/2, ஆம் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் |
| 7. பாதையின் முடிவு | : 18/2, ஆம் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் |

01-740 / 4

---

**அம்பலாங்கொடை பிரதேச சபை**

தெருவுக்குப் பெயரிடுதல்

அம்பலாங்கொடை பிரதேச சபையின் அதிகார வரம்பிற்குள் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்களுக்கு அட்டவணையில் “முன்மொழியப்பட்ட பெயர்” என்ற பெயரில் பெயரிடுவதற்கான பிரதேச சபையின் தீர்மானம், பிரதேச சபை சட்டம் இலக்கம் 15 இன் பிரிவு 198 இன் படி நிறைவேற்றப்பட்டுள்ளது. 1987 ஆம் ஆண்டின் சட்டமூலம் மற்றும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 (1) பிரிவு (அ) இன் அடிப்படையில் கௌரவ ஆளுநரால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம். இனிமேல் இந்தச் சாலை முன்மொழியப்பட்ட பெயரால் அறியப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கிறேன்.

செயலாளர்,
அம்பலாங்கொடை பிரதேச சபை.

**அட்டவணை**

| *சாலையின்* | | *பரிந்துரைக்கப்பட்ட பெயர்* |
|---|---|---|
| ஆரச்சிகந்த வைத்தியசாலைக்கு | முன்னால் உள்ள சாலை | கிரீன் ஹில்ஸ் அவனியு |

01-746

## தெஹிவளை கல்கிசை மாநகர சபை

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 225 ஆம் அத்தியாயமான 1947 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71(i) ஆம் பிரிவின் பிரகாரம் மேல் மாகாண கௌரவ ஆளுநரால் கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வீதி “கல்விகாரை வீதி” எனப் பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

எம்.எம்.சி.கே.கே.மான்னப்பெரும,
மாநகர ஆணையாளர் மற்றும்
அதிகாரம், பொறுப்பு, கடமை என்பவற்றை,
நிறைவேற்றும் அதிகாரி,
தெஹிவளை கல்கிசை மாநகர சபை.

தெஹிவளை கல்கிசை மாநகர சபை அலுவலகம்,
தெஹிவளை.
2025, சனவரி 06.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | - | தெஹிவளை கல்கிசை மாநகர சபை |
| 2. மாவட்டம் | - | கொழும்பு |
| 3. வீதியின் தற்போதைய பெயர் | - | கல்வளை வீதி |
| 4. வீதிக்கு புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | - | கல்விகாரை வீதி |
| 5. வீதியின் விபரங்கள் | - | இந்த வீதி, மாநகர சபையின் கல்வளை பிரிவு வரிப்பண இலக்கம் 39 இல் ஆரம்பித்து, மாநகர சபையின் உத்யான பிரிவு வரிப்பண இலக்கம் 225 இல் முடிவடைகிறது. |

01-764

---

## குளியாப்பிடிய பிரதேச சபை

### ஊன் அறுத்தல் கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் அதிகாரத்தின் கீழ் செய்யப்படும் அறிவித்தலாகும்

இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவரினால் அவரின் பெயரின் முன்னிலையில் காட்டப்பட்டுள்ள இடத்தில் பன்றியிறைச்சி விற்பனை நிலையமொன்றினையும் பன்றியிறைச்சி அறுக்கும் இடமொன்றினையும் கொண்டு நடாத்திச் செல்வதற்காக உரிமப்பத்திரம் வழங்குவது பற்றி குளியாப்பிடிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் குடியிருக்கும் யாராவது ஒருவர் எதிர்ப்புத் தெரிவிப்பாராயின் அவ்வாறு எதிர்ப்பதற்கான காரணத்தை எழுத்து மூலம் இரண்டு பிரதிகளுடன் இவ் அறிவித்தலினை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் 21 நாட்களினுள் என்னிடத்தில் அறிவிக்க வேண்டும் என்றும் ஊன் அறுத்தல் கடளைச் சட்டத்தின் 272 ஆம் அதிகாரத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

**அட்டவணை**

| *விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும்* | *தன்மை* | *கட்டமைக்கப்பட்ட இடம்* |
|---|---|---|
| டப்.என்.தில்ஷான் பெரேரா<br>தெலன தலாகொலஹேன | பன்றியிறைச்சி விற்பனை நிலையம் மற்றும் அறுக்கும் இடம் | இலக்கம் 9340 மற்றும் 2016/02/29 திகதி உறுதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குருநாகல் மாவட்டத்தில் கடுகம்பொல ஹத்பத்துவை யடிகஹ கோரளையில் தெலன கிராமத்தில் அமைந்துள்ள மாவதஹேன எஸ்டேட் அல்லது மஹகெதர வத்த நிலம் |

ஆர்.டீ.கல்யாணீ அமரஜீவ,
செயலாளர்,
குளியாப்பிடிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குளியாப்பிடிய,
2025, சனவரி 22.

01-770

---

**கிரிபாவ பிரதேச சபை**

**கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் மாட்டிறைச்சிக் கடையை நடாத்திச் செல்வதற்கு உரித்தாக எதிர்ப்பு தெரிவிப்பதாயின் அதற்காக அழைப்பு விடுத்தல்**

இங்கு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களினால் அவர்களது பெயர்களது முன்னிலையில் காட்டப்பட்டுள்ள இறைச்சிக் கடையை நடாத்திச் செல்வதற்கு அல்லது கசாப்புக் கட்டளைச் சட்டத்தின் 07(1) ஆம் பிரிவின் கீழ் உரிமப்பத்திரம் ஒன்றை வழங்குமாறு கிரிபாவ பிரதேச சபையின் உரிய அதிகாரியான என்னிடம் கோரிக்கை சமர்பிக்கப்படுகின்றது.

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தளத்தில் மாட்டிறைச்சிக் கடையை நடாத்திச் செல்வதற்காக உரிமப்பத்திரம் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் இருப்பின் அவ்வாறு எதிர்ப்பு தெரிவிப்பதற்கான காரணத்தை குறிப்பிட்டு இவ் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்த திகதி தொடக்கம் 14 நாட்களினுள் இரு பிரதிகளுடன் பதிவுத் தபாலில் அல்லது நேரில் வந்து ஒப்படைக்குமாறு கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவில் வசிப்பவர்களுக்கு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

எச். எம். எஸ்.ஹேரத்,
செயலாளர்,
கிரிபாவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கிரிபாவ,
2025, தை 24.

**அட்டவணை**

| *தொடர் இலக்கம்* | *விண்ணப்பதாரியின் பெயர்* | *மாட்டிறைச்சி வியாபார நிலையத்தை நடாத்திச் செல்ல எதிர்பார்க்கும் இடம்* |
|---|---|---|
| 01 | மொஹொமட் பசீர் மொஹொமட் ரியாஸ் | தம்புத்த, கல்கமுவ முகவரியில் இலக்கம் 62882 கான உறுதிப்பத்திர இலக்கம் உடைய காணி |

01-776

## கம்பஹா பிரதேச சபை

## 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) ஆ வாசகத்தின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) 'அ' வாசகத்திற்கு ஏற்ப நடவடிக்கை எடுத்து 24(1) 'ஆ' வாசகத்தின் பிரகாரம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் கம்பஹா பிரதேச சபைக்குரித்தான வீதிகள் என இத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது.

இவ்வீதிகள் அடையாளமிடப்பட்டுள்ளது ஏதேனும் இடமொன்றுக்குக் குறுக்காக அவ்விடத்தின் உரிமையாளராக அவ்விடத்துக்கு உரிமை கோரும் ஏவரேனும் ஆளொருவராயிருப்பின் அவர் இவ் அறிவித்தல் பிரசுரமாகிய தினத்திலிருந்து 01 மாத காலத்திற்குள் அவ்விடத்திற்கான தமது உரிமையை நிரூபிப்பதற்காக உரிய நீதிமன்றமொன்றில் வழக்குத் தொடர்ந்து எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(2) வாசகத்தின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது. இவ்வாறு தரப்பட்ட கால எல்லைக்குள் எவ்வித எதிர்ப்பும் கிடைக்கப்பெறாவிட்டால், அவ் வீதிகள் பிரதேச சபை வீதிகளென ஏற்றுக்கொள்ளப்பட்டு நிர்வகிக்கப்படும் என மேலும் அறிவிக்கப்படுகிறது.

எஸ். ஏ. என். பீ. சுரவீர,
கம்பஹா பிரதேச சபை செயலாளர் மற்றும்
அதிகாரம், செயற்பாடுகள் மற்றும் பணிகள் என்பனவற்றை
செயற்படுத்தும் உத்தியோகத்தர்,
கம்பஹா பிரதேச சபை.

2024, திசெம்பர் 22.

**அட்டவணை**

| *தொ. இல.* | *கிராம அலுவலர் பிரிவு* | *வீதியின் பெயர்* | *வீதியின்* | | | | *நில அளவையாளர் பெயர்* | *வரைபட இலக்கமும் திகதியும்* |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | *ஆரம்பம்* | *முடிவு* | *நீளம் (மீ.)* | *அகலம் (மீ.)* | | |
| 01 | 237 கொஸ்ஸிஸ்ன கிழக்கு 236 | கொஸ்ஸின்ன ஏ.கே.சீ. அமரசிங்க மாவத்தை | கலுவல வீதி | யாகொட சுமேத ஒழுங்கை வரை | 50 | 1,110 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/1IBC ஒழுங்கை. வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-042 2024/11/07 |
| 02 | 240/B மேற்கு வெலிவேரிய | எம்பரலுவ அட்சியவஸ்கம வீதி | 514 பேருந்து மார்க்கம் | 514 ரதனசிரி தேரர் ஒழுங்கை | 4.5 | 1,066 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IITBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-043 2024/11/07 |
| 03 | 232 அமுனுகொட வடக்கு | அமுனுகொட கலபடவத்த வீதி | பராக்கிரமபாகு பன்சல அருகே | கிதுல் கஹமுல வீதி வரை | 4.0 | 0,480 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IITBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-044 2024/11/07 |

| தொ. இல. | கிராம அலுவலர் பிரிவு | வீதியின் பெயர் | வீதியின் | | | | நில அளவையாளர் பெயர் | வரைபட இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்பம் | முடிவு | நீளம் (மீ.) | அகலம் (மீ.) | | |
| 04 | 244 பரகன்தெனிய தெற்கு | பங்களாவத்த சுற்றுவட்ட பாதை | பேக்கரி கடை அருகில் | பேக்கரி கடை வரை | 5.5 | 1,475 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IIBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-045 2024/11/07 |
| 05 | 209 பொல்லத | பொல்லத தெனிய வீதி | 276 பேருந் து மார்க்கம் | 266 பேருந்து மார்ககம் வரை | 4.0 | 0,800 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IITBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-046 2024/11/07 |
| 06 | புளுகஹகொட | புளுகஹகொட மே தின ஒழுங்கை | 276 பேருந் து மார்க்கம் | 276 பேருந்து மார்ககம் வரை | 3.5 | 0,505 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IITBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-047 2024/11/07 |
| 07 | 215 கலஹிட்டியாவவ கிழக்கு | கலஹிட்டியாவ சிரமதான ஒழுங்கை | கனேமுல்ல கடவத்த மார்க்கம் | அன்னாசி வத்த மார்க்கம் வரை | 4.0 | 0,280 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IITBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-048 2024/11/07 |
| 08 | 232/D முதுன்கொட மேற்கு 233/A மொரகொட 2 | முதுனகொட எச். பீ.டப். பெரேரா மாவத்த | கம்பஹா பள்ளி வீதி | ஒருதொட்ட வீதி வரை | 4.5 | 0,972 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IITBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-049 2024/11/07 |
| 09 | 216 ஹொரகொல்ல வடக்கு | ஹொரகொல்ல அனுர ஒழுங்கை | கனேமுல்ல கிரிந்திவிட்ட வீதி | பெரோ வீதியின் முடிவிலுள்ள வயல் வரை | 3.5 | 0,427 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IITBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-050 2024/11/07 |
| 10 | 216 ஹொரகொல்ல வடக்கு 216/B ஹொரகெல்ல தெற்கு | ஹொரகொல்ல மஹவத்த வீதி | 273 பேருந்து மார்க்கம் | ஹொர கொல்ல கோபுர சந்தி வரை | 3.0 | 0.270 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IIBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-051 2024/11/07 |
| 11 | 216 ஹொரகொல்ல வடக்கு | ஹொரகொல்ல ராஜபக்ஷ ஒழுங்கை | கலஹிட்டியாவ வீதி கோபுர சந்தி | போர்வீர நினைவுச் சின்னம் வரை | 4.0 | 0,560 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IIBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-052 2024/11/07 |

| தொ. இல. | கிராம அலுவலர் பிரிவு | வீதியின் பெயர் | வீதியின் | | | | நில அளவையாளர் பெயர் | வரைபட இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்பம் | முடிவு | நீளம் (மீ.) | அகலம் (மீ.) | | |
| 12 | 240 இஹல இம்புல்கொட வடக்கு 239/B கல்லொலுவ | இம்புல்கொட கொதலாவல மாவத்த | கண்டி வீதி | கல்லொலுவ விசாகா வீதி வரை | 5.0 | 1,110 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IIBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-053 2024/11/07 |
| 13 | 240 இஹல இம்புல்கொட வடக்கு | இம்புல்கொட பியரத்ன ஒழுங்கை | கொழும்பு கண்டி வீதி | மேற்கு வெலி வேரிய சுதர்ஷ னாராம வீதி வரை | 6.0 | 2,346 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IIBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-054 2024/11/07 |
| 14 | 218 மாகெவிட்ட | மாகெவிட்ட லொட்டோ போட் வீதி | ஜாஎல மார்க்கம் | வயல் வெளி வரை | 3.5 | 0,800 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IIBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-055 2024/11/07 |
| 15 | 236 பஹல யாகொட | பஹல யாகொட பழைய பாடசாலை ஒழுங்கை | யாகொட புகையிரத நிலைய அருகிலுள்ள மார்க்கம் | மஹவத்த மார்க்கத்தின் சந்தி வரை | 2.5 | 0,400 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IIBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-056 2024/11/07 |
| 16 | 202/A ரத்மல்விட்ட | ரத்மல்விட்ட கம்பஹா வீதி | கனேமுல்ல கிரிந்திவிட்ட மார்க்கம் | பஹலகம் புத்தர் சிலை வரை | 4.5 | 2,106 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IIBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-057 2024/11/07 |
| 17 | 242 எம்பரலுவ வடக்கு 1 240 மேற்கு வெலிவேரிய | சுதர்ஷனாராம வீதி | புதிய கண்டி வீதி (பியகம வீதி) | 514 பேருந்து மார்க்கம் வரை | 5.5 | 1,950 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IIBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-058 2024/11/07 |
| 18 | 219/B கல்லொலுவ | வெலிவேரிய கல்லொலுவ வீதி | வெலிவேரிய புதிய கண்டி வீதி (பியகம வீதி) | இம்புல் கொட பியரதன ஒழுங்கை | 6.0 | 1,122 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IIBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-059 2024/11/07 |
| 19 | 236/A மாஹேன | யாகொட மாஹேன வத்த சுற்றுவட்ட பாதை | ட்ரெக்மோ வீதி | ட்ரெக்மோ வீதி | 5.0 | 1,180 | வீ.ஷம்முகநாதன் இல. 30/1/-2/IIBC ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 | GPS-060 2024/11/07 |

01-775

# நானாவித அறிவித்தல்கள்

## திருத்தம்

### கதிர்காமம் பிரதேச சபை

**2024.11.29 ஆந் திகதிய 2413 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 312/9 ஆம் இலக்க "கழிவுப் பொருட்களுக்கு வரி அறவிடல் - 2025" அறிவித்தலின் அட்டவணை பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும்.**

**அட்டவணை**

| | *பொருள் / சேவை* | *மாதாந்தம் / நாளாந்தம்* | *விலை (ரூபா)* |
|---|---|---|---|
| 01. | 1-3 அறைகளைக் கொண்ட விடுமுறை விடுதிகளுக்கு | மாதாந்தம் | 750.00 |
| 02. | 4-5 அறைகளைக் கொண்ட விடுமுறை விடுதிகளுக்கு | மாதாந்தம் | 1,000.00 |
| 03. | 6-10 அறைகளைக் கொண்ட விடுமுறை விடுதிகளுக்கு | மாதாந்தம் | 1,500.00 |
| 04. | 11-20 அறைகளைக் கொண்ட விடுமுறை விடுதிகளுக்கு | மாதாந்தம் | 3,000.00 |
| 05. | 21-30 அறைகளைக் கொண்ட விடுமுறை விடுதிகளுக்கு | மாதாந்தம் | 7,500.00 |
| 06. | 31-50 அறைகளைக் கொண்ட விடுமுறை விடுதிகளுக்கு | மாதாந்தம் | 10,000.00 |
| 07. | 51 அறைகளுக்கு மேல் | மாதாந்தம் | 12,500.00 |
| 08. | பூஜைத் தட்டு மற்றும் பழக் கடை | மாதாந்தம் | 300.00 |
| 09. | சிற்றுண்டிச்சாலைகளுக்கு | மாதாந்தம் | 20,000.00 |
| 10. | கட்டட இடிபாடுகள் ஒரு ரக்ரர் (தம்மால் அகற்றுவதற்கு முன்வைக்கப்படும் போது) | | 12,000.00 |
| 11. | கட்டட இடிபாடுகள்/ உக்கிய மரம், செடி, கொடிகளை பிரதேச சபையால் அகற்றப்படுமாயின் ஒரு லோட் ரக்ரருக்காக | | 25,000.00 |
| 12. | சில்லறைக் கடை | மாதாந்தம் | 250.00 |

01-772

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.